# யாதவர் பாசறை

ஆசிரியர் மற்றும்
வெளியிடுபவர் :
**வி. யுவராஜ்**

ஆசிரியர் குழு :
**செ.மு. கோபாலகிருஷ்ணன்**
**வி. சேகர்**
**ந. விவேகராகவன்**

அலுவலகம் :
**வி. யுவராஜ்**
யாதவர் பாசறை,
7, பார்த்தசாரதி சுவாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.
தொலைபேசி : 9840161517.

சந்தா விவரம் :
ஆயுள் சந்தா : ரூ.500/-
ஆண்டு சந்தா ரூ.100/-



அன்பு யாதவ சகோதர,
சகோதரிகளே,

வணக்கம், இன்றைய சூழ்நிலையில், மக்களின் மனதில் எழும் கேள்விகள், தமிழகத்தை அடுத்து ஆளப்போவது யார் ? எந்த ஆட்சி வந்தால் நம் சமுதாயத்திற்கு நன்மை நடக்கும் ? என்பது தான். நம் பலம் அரசியல்வாதிகளுக்கு தெரிந்தால் தான் நாம் எதிர்ப்பார்ப்பது நடக்கும். அதற்கு நாம் பஞ்சாயத்து தேர்தலில் நின்று வெற்றி பெற்று நம் சக்தியை காட்டுவது தான், ஒரே வழி. சட்ட மன்ற / பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெறுவது முக்கியம் தான். ஆனால் இன்று அது சாத்தியமாக என்றால் கண்டிப்பாக இல்லை. இந்திய அரசியலுக்கு ஆத்திச்சூடி எழுதிய காங்கிரஸ் பேரியக்கமே, பஞ்சாயத்து தேர்தலில் வெற்றி பெறுவதே கட்சி வளர்ச்சிக்கு அடித்தளமாக இருக்கும் என்று எண்ணும் பொழுது, நாமும் பொறுமையை கடைபிடித்து, முதலில் பஞ்சாயத்து தேர்தலில் வெற்றி பெற வேண்டும். இதைதான் ஏற்கனவே, செப்டம்பர் 2010 மாத இதழில் எழுதியுள்ளேன். பொறுமையை கடைபிடிக்காமல் இன்று மாநாடு, நாளை சட்டமன்ற உறுப்பினர், மறுநாள் பாராளுமன்ற உறுப்பினர் என்பது நடைமுறையில் சாத்தியமில்லாதது. பொறுமையோடு கூடியகடினஉழைப்பும், தன்னம்பிக்கையும்தான் வெற்றிக்கு மூலதனம். பொறுமையின் பெருமையை எடுத்துக்காட்டும் ஒரு கதையை உங்களுக்கு விளக்க ஆசைப்படுகிறேன்.

மூன்று கற்களுக்குள் நடந்த உரையாடல் இது. ஒரு கல், அம்மன், ஒரு கல் அம்மன் வீற்றிருக்கும் கல், மற்றொன்று அம்மன் அருகில் உள்ள படி. படிக்கட்டாக இருந்த கல் கூறியது, “அனைவரும் என் மீது நடப்பதால் எனக்கு மிகுந்த வலி ஏற்படுகிறது. நான் என்ன பாவம் செய்தேன்? நான் ஏன் இப்படி எல்லோர் காலிலும் மிதிப்பட வேண்டும் என்று புலம்பியது. அம்மன் வீற்றிருக்கும் மற்றொரு கல், என் வாழ்நாள் முழுவதும் உன்னை (அம்மனை) சுமந்து கொண்டிருக்கிறேன். நான் ஏன் இப்படி கஷ்டப்பட வேண்டும் என்று கதறியது. “நாங்கள் இருவரும் இவ்வளவு கஷ்டப்பட்டும் மக்கள் எங்களை மதிக்கவில்லை. ஆனால் ஒரு வலியும் இல்லாமல் சுகமாக உட்கார்ந்து கொண்டிருக்கும் உன்னை மட்டும் அனைவரும்

வணங்குகிறார்களே. அது ஏன்" என்று மற்ற இரு கற்களும் கேட்டன. அதற்கு அம்மனாக வீற்றிருக்கும் கல் கூறிய பதில் இதுதான். "நீங்கள் இன்று இப்படி அவதிப்படுவதற்கு உங்கள் பொறுமையின்மை தான் காரணம். சிற்பி உங்கள் மீது உளியை வைத்து செதுக்க முனைந்த பொழுது, வலி தாங்க முடியாமல், நீங்கள் கதறியதால் அவர் உங்களை விட்டு விட்டார். ஆனால் அவர் என்னை அம்மனாக வடிவமைக்க பல முறை என் மீது உளியினால் செதுக்கிய பொழுதும் அந்த வலியை தாங்கிக் கொண்டு பொறுமையாக இருந்ததால் தான், மக்கள் என்னை அம்மனாக வழிபடுகிறார்கள்.

பொறுமையில்லாத கற்கள், வாழ்நாள் முழுவதும் கஷ்டத்தைத்தான் அனுபவித்தன. ஆனால் பொறுமையோடு வலியைத் தாங்கிக் கொண்ட கல், அம்மனாக மக்களால் வழிபடப்பட்டது. இதன் மூலம் நாம் தெரிந்துக் கொள்ள வேண்டியது, வெற்றி என்பது ஃபாஸ்ட் புட் (Fast Food) போன்றது அல்ல, உடனடியாக கிடைப்பதற்கு. அதற்கு உழைப்பும் வேண்டும், தன்னம்பிக்கையும் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக பொறுமையும் வேண்டும். படிப்படியான வெற்றி, நிரந்தர வெற்றி, அதுவே மாபெரும் வெற்றியைத் தேடித்தரும், ஆகையால் முதலில் பஞ்சாயத்து தேர்தலில் வெற்றியைக் கண்டு, வளர்ந்து பின்னர் சட்டமன்ற / பாராளுமன்ற தேர்தலை அணுகுவதே சாலச் சிறந்தது.

அத்தகைய முயற்சியில் ஈடுபட்டிருக்கும் எங்களுக்கு, உங்கள் ஆதரவையும், ஆலோசனைகளையும் எதிர்பாக்கும்.

உங்கள் சகோதரன்,

**வி. யுவராஜ்**
ஆசிரியர்


With best Compliments from :

www.vgrishiinfotech.com
Create your own website for your Office / Shops
Web Design / Web Hosting / SEO / Domain Registration

**VG RISHI INFOTECH**

2/10, 2nd Street, Greenways Road, N.S. Garden
R.A. Puram, Chennai - 600 028.
Ph : 044 - 42815119, Cell : 9894129703, 9445505607
www.vgrishiinfotech.com mail : info@vrgishi.com
15% discount offer for Yadhavas

# 108 வைணவத் திருத்தலங்கள்

## சோழநாட்டுத் திருப்பதிகள்

### 16. திருக்கண்ண மங்கை

மிகவும் பிரசித்திப் பெற்ற இந்த ஸ்தலம் கும்பகோணம் - திருவாரூர் மார்க்கத்திலிருந்து சுமார் நாற்பது கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. திருச்சேறையிலிருந்து 24 கிலோ மீட்டர் தூரம். பகவான் திருவடியை அடைந்தால் மோட்சம் கிடைக்கும் என்று பொதுவாகச் சொல்வார்கள். இந்த திருக்கண்ணமங்கை கோயிலுக்குச் சென்று பிரார்த்தனை செய்தாலே மோட்சம் கிடைத்துவிடும் என்பது பெரியோர்களது வாக்கு.

வெட்டாற்றின் தென் பகுதியில் சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பில் ஐந்து நிலை இராஜகோபுரம் மூன்று பிராகாரங்களுடன் மூலவர் பக்தவத்ஸலப் பெருமாள் நின்ற திருக்கோலம். தாயார் பூமிதேவி. அபிஷேகவல்லி என்று மற்றொரு பெயர். விமானம் உத்பல விமானம். தீர்த்தம் தர்சண புஷ்கரணி, தலவிருட்சம் மகிழமரம். வருண பகவானுக்கும், ரோமச முனிவருக்கும் நேரிடையாகக் காட்சி கொடுத்த ஸ்தலம். எப்பேர்பட்டவர்களும் தங்களுக்கு மோட்சம் கிட்ட வேண்டுமானால் இந்த ஸ்தலத்தில் ஒரு நாள் இரவு முழுவதும் தங்கி, மறுநாள் பெருமாளைத் தரிசித்தால் போதும் என்பது ஐதீகம்.

சந்திரன், தனது குருவின் மனைவியோடு தொடர்பு கொண்டதால் குருவின் சாபத்திற்கு ஆளாகி தன் ஒளியெல்லாம் இழந்து கவலைப்பட்ட பொழுது, பிரம்மதேவன் சந்திரனிடம் வந்து பூலோகத்திலுள்ள திருக்கண்ணமங்கை ஸ்தலத்திற்குச் சென்று அங்குள்ள தர்சண புஷ்கரணியில் நீராடி பக்தவத்ஸலப் பெருமாளைச் சரணடைந்தால் இழந்து கொண்டிருக்கும் ஒளியை மீண்டும் பெற முடியும் என்று வழிகாட்டினார். சந்திரனும் பிரம்மதேவர் சொன்னபடி இங்கு வந்து தங்கி பெருமாளைத் தரிசித்து குரு சாபம் நீங்கப் பெற்றான்.

நாதமுனிவரின் சீடரான திருக்கண்ண மங்கையாண்டான் இந்த ஸ்தலத்தில் ஆனிமாதம் திருவோணத்தன்று அவதரித்தார். லெக்ஷ்மிதேவியும் பகவானை நோக்கித் தவம் செய்த ஸ்தலம் என்பதால் லெஷ்மிவனம் என்ற பெயரும் இந்த ஸ்தலத்திற்கு உண்டு. சிவபெருமான் இங்கு நான்கு பக்கங்களிலும் நான்கு உருவம் கொண்ட பக்தவத்ஸலப் பெருமாளைக் காவல் காத்து வருவதாகச் சொல்லப்படுகிறது. தாயார் சன்னதியில் தேன்கூடு ஒன்று உண்டு. அதற்கு தினமும் பூஜை செய்யப்படுகிறது. கோயிலுக்கு அழகுபடுத்தும் விமானம், மண்டபம் அரண்யம், ஸரஸஸு க்ஷேத்ரம், ஆறு நகரம் ஆகிய ஏழு அம்சங்களும் இங்கு ஒன்று சேரக் கிடைப்பதால் இந்த ஸ்தலம் 'ஸப்தாபம்ருத க்ஷேத்ரம்' - என்று புராணங்களில் மிகப் பெருமையாகச் சொல்லப்படுகிறது.

**பரிகாரம் :**

வாழ்க்கையின் பயனே - மறுபிறவி வேண்டாம் என்பதுதான். மோட்சத்தை வேண்டுபவர்கள். குடும்பத் தொல்லைகளால் பாதிக்கப்பட்டு நிம்மதியை இழந்து கொண்டிருப்பவர்கள். மறைமுக நோயினாலும், மற்றவர்கள் வெறுக்கத்தக்க நோயினாலும்பாதிக்கப்பட்டுதிண்டாடிக்கொண்டிருப்பவர்கள்.யாருக்கும்தெரியாமல், மனச்சாட்சிக்கு துரோகம் செய்து விட்டு பாவத்தைச் செய்கிறவர்கள் அத்தனைபேரும் இந்த ஸ்தலத்திற்குவந்து ஓர் இரவு தங்கி, மறுநாள் விடியற்காலையில் பக்தவத்ஸலப் பெருமானைத் தரிசித்தால் அவர்கள் மோட்சம் நிலைக்கு மரியாதையோடு சென்றடைவார்கள் என்பதுதான் இத்தலத்தின் பெருமை.

## 17. திருக்கண்ணபுரம்

நாகப்பட்டினத்திலிருந்து நன்னிலம் செல்லும் வழியில் நன்னிலத்திற்கு கிழக்கே எட்டு கிலோ மீட்டர் தூரத்தில் கிருஷ்ணாரண்ய க்ஷேத்ரம், பஞ்ச கிருஷ்ணா க்ஷேத்ரம், ஸப்த புண்ணிய க்ஷேத்ரம் என்னும் புனிதமான ஸ்தலம் இருக்கிறது. இதைத் திருக்கண்ணபுரம் என்று புராணங்கள் கூறுகின்றன. வடக்கே திருமலைராயனாறு, தெற்கே வெட்டாறு இந்த இரண்டிற்குமிடையே கிழக்கு மேற்காக 316 அடி நீளம் 216 அடி அகலம் வடக்கு தெற்காக 95 அடி உயர கோபுரம் 7 நிலை கொண்டு கம்பீரமாக காட்சியளிக்கிறது.

மூலவர் ஸ்ரீ நீலமேகப் பெருமாள் நின்ற திருக்கோலம், தாயார் கண்ணபுர நாயகி (ஸ்ரீதேவி, பூதேவி, ஆண்டாள், பத்மினி என்ற பெயரும் உண்டு) கோவிலுக்கு எதிரில் பெரிய புஷ்கரணி. இந்த நித்ய புஷ்கரணி 450 அடி நீளம் 415 அடி அகலம். ஒன்பது படித்துறை கொண்டது. உற்சவர் சௌரிராஜப் பெருமாள். விமானம் உத்பலா வதக விமானம். பஞ்சகிருஷ்ண ஸ்தலங்களில் இதுவும் ஒன்று. பெருமாள் எல்லா அக்ஷரங்களிலும் இந்த ஸ்தலத்தில் ஸாந் நித்யம் செய்கிறபடியால் இந்த ஸ்தலம் ஸ்ரீமதஷ்டா க்ஷர மகா மந்திர ஸித்தி க்ஷேத்ரம் என்று புராணங்களில் சொல்லப்படுகிறது. திருவரங்கம் ஸ்தலம் மேலை வீடு. இந்த ஸ்தலம் கீழை வீடு என்று உயர்ந்ததாகப் போற்றப்படுகிறது.

அபய ஹஸ்தத்திற்குப் பதிலாக வரதஹஸ்தம் காணப்படுகிறது. உற்சவர், கன்யகாதானம் வாங்க கையெந்திய நிலையில் சேவை சாதிக்கிறார். விபிஷணனுக்கு ஸ்ரீரங்கநாதர் அருளியபடி அமாவாசைத் தினத்தன்று இறைவன் நடை அழகை சேவை சாதித்த ஸ்தலம். விபீஷணனுக்குத் தனிச்சன்னதி உண்டு. உபரி சரவசு மன்னன் புத்திரபேறு வேண்டி இந்த ஸ்தலத்தில் தவம் செய்து பத்மினி என்ற அழகானப் பெண் குழந்தைக்கு தந்தையானதால் பத்மினி, இத்தலப் பெருமானே தனக்குக் கணவனாக வரவேண்டும் என்று விரும்பியதால் சௌரிராஜப் பெருமாளே பத்மினியை மணந்து கொண்டார்.

சோழ மன்னர் ஒருவர், ஒருநாள் இந்த பெருமாளுக்குச் சூட்டிய மாலையில் தலைமுடி இருப்பதைக் கண்டு கோயில் அர்ச்சகரிடம் கேட்க இது பெருமாளின் தலைமுடிதான் என்று அர்ச்சகர் பதில் சொன்னார். இதை நம்ப மறுத்த அரசன், கருவறைக்குச் சென்று பெருமாளைப் பார்த்தான். பெருமாள் தலையில் முடி இருந்தது. அது உண்மையான முடிதானா என்று சந்தேகப்பட்டு அரசன் அந்த தலைமுடியை ஈழுக்க பெருமாள் தலையிலிருந்து இரத்தம் வந்தது. அரசன் இதைக்கண்டு அதிர்ந்து பெருமாளிடம் மன்னிப்புக் கேட்டான். பெருமாளும் தன் தலைமுடியை வளர்த்து அரசனுக்கு காண்பித்து அரசனது சந்தேகத்தைப் போக்கி மன்னித்து அருளினார். இதனால் உத்ஸவப் பெருமாளுக்கு சௌரி ராஜன் என்ற திருப்பெயரும் உண்டு.

முனையத்தரையன் என்ற பக்தர் தனது மனைவி சமைத்தப் பொங்கலை அர்த்தசாமத்திற்குப் பின்பு கோயிலுக்கு எடுத்துச் சென்று பெருமாளுக்கு நைவேத்தியம் செய்ய நினைத்தார். பகவானும் பக்தனின் வேண்டுகோளை ஏற்று, மூடிய கோயில் கதவைத் திறந்து மணியோசை அடித்து வெண்பொங்கலை நைவேத்தியமாக ஏற்றுக் கொண்டார். இன்றைக்கு இந்த பெருமாளுக்கு அர்த்த சாமத்தில் முனியைத் தரையர் நினைவாக முனியோதரம் பொங்கல் சமர்ப்பிக்கப்படுகிறது. இக்கோயிலுக்கு தனியே சொர்க்க வாசல் இல்லை. வீகடாக்ஷன் என்றும் அசுரனை பெருமாள் வதம் செய்த இடம். பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகர ஆழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் ஆகியோர் இங்கு மங்களாசாஸனம் செய்திருக்கிறார்கள்.

**பரிகாரம்**

தினமும் சந்திக்கும் கொடூரமானப் பிரச்சனைகளிடமிருந்து விலகவும் மந்திரங்களாலும், தந்திரங்களாலும் துன்பப்படும் அனைவரும் அதிலிருந்து விலகவும் இங்கு வந்து, புஷ்கரணியில் பெருமாளை சேவித்து முனித்தரையப் பொங்கலை நைவேத்தியம் செய்து உண்டால் இடர்பாடுகள் நீங்கி, வாழ்க்கையில் அனைத்து சௌபாக்கியங்களையும் பெறுவார்கள்.


**THE TIRUVATEESWARAR HINDU JANOPAKARA NIDHI LTD**

SINCE 1909

**ACCEPTS FIXED DEPOSITS**
**SANCTIONS LOAN AGAINST SECURITY OF JEWELS,**
**LAND & BUILDING WITHIN AND ADJOINING CHENNAI CITY**
**AND ALSO ON ITS OWN DEPOSITS**

New No.50, Old No.36, Kuppumuthu Street, Tiruvateeswaranpet,
Chennai – 600 005. Ph: 044-28414520

AEPL

# AMBLY ENGINEERING PRIVATE LIMITED

1, Madurai Veeran Koil Street,T. Nagar, Chennai - 600 017.

**Phone : 24363435, 24363132 www.amblyengineering.com**



Industrial Structures



Heavy Equipment Erection



Industrial Piping



Ship Building

*With best compliments from :*

**P. MUTHUKUMARASAMY,** B.E., M.B.A.,

**G.K.KANNAN,** B.E,

9380410248

# ARCH ALUM FABS

***Aluminium Cladding  * Structural Glazings**

***Doors* Windows* Partitions* Ventilators**

***False Ceiling**

**Plot No.20, Arignar Anna Industrial Estate,**

**Mettukuppam, Ph: 6562 3307, 65623308, 24761830**

**E-mail: gkkannan@archalumfabs.com**

**Vanagaram, Chennai – 600 095.**

**(Opp.Porur Gardens Phase I)**



# யாதவ கல்யாண மாலை

யாதவ சோஷியல் அசோசியேஷன் 27-2-2011 அன்று காலை 9.00 மணிக்கு நடத்தவிருக்கும் கல்யாண மாலை நிகழ்ச்சிக்கு உங்களை அன்புடன் வரவேற்கிறோம். ஐந்நூறுக்கும் மேற்பட்ட மணமகன், மணமகள் பற்றிய விவரங்கள், ஜாதகங்கள் உள்ளன. உங்கள் மகன்/மகள் பற்றிய விவரங்களை 20-2-2011 முன்பு இலவசமாக பதிவு செய்து கொள்ளவும். நிகழ்ச்சிக்கு வருபவர்கள் தங்கள் மகன் / மகள் பற்றிய விவரங்கள் ஜாதகத்தோடு தங்கள் மகன், மகளையும் அழைத்து வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இடம் :

## கோகுல திருமண மண்டபம்,

கிழக்கு ராஜ வீதி,
பெரிய காஞ்சிபுரம்

மேலும் விவரங்களுக்கு
தொடர்பு கொள்ளவும்.

**திருமதி. யுவராஜ்**

**செல் : 9840705887 / 9500093910 / 044-42110782**

## முற்றிலும் இலவச சேவை

*With best compliments from*

**N. SRINIVASAN**
Managing Partner

# M.V.P. NATESA MUDALIAR & SONS
# M.V.P.N.K. ENTERPRISES

DISTRIBUTORS : XETEX - NONWOVEN INTERLINING
STOCKIST OF : MADURA COATS &
STOCKIST OF ALL GARMENT ACCESSORIES

**New No.5, Old No.4, Bangaru Street, Ellis Road,**
**Mount Road, Chennai - 600 002.**
Phone : 044-2858 4077, Mobile : 98417 22419, Telefax : 044-2851 0748

*With best compliments from*

# S.M. INTERIORS

(INTERIOR CONTRACTORS)
Suppliers of : All types of False Ceiling and Partition Materials,
Fibre Glass wool, False Flooring & All Accessories

★ GYB Board False Ceiling ★ GYB Board Partition ★ Cornics Mouldings ★ Armstong Grid Ceiling ★ Plaster of Paris ★ Painting Works ★ Aerocon Partition ★ Vinayal Floorings ★ Aluminium Partition & ACP Work Etc

New No.5A, Main Street, P.P. Garden, Aminjikarai,
Chennai - 600 029. Tel : 044-26208993, 43532451
Cell : 9444062351
E-mail : sminteriorslu@gmail.com / smenterpriseslu@gmail.com

# தமிழ்நாடு அரசு நலத்திட்டங்கள்

## சமூக நலம்

### அரசாங்க சேவை காப்பகம்

| | | | |
|---|---|---|---|
| 1. | திட்டத்தின் பெயர் | : | அரசாங்க சேவை காப்பகம் |
| 2. | திட்டத்தின் குறிக்கோள் | : | பொருளாதாரம் மற்றும் சமுதாயத்தில் பின் தங்கிய கைவிடப்பட்ட விதவை, துணையற்ற மகளிர், ஊனமுற்ற மகளிற்கு கல்வி மற்றும் வாழ்க்கை தொழில் சார்ந்த பயிற்சி அளிக்கப்படும். |
| 3. | உதவி அளித்தல் | : | தங்குமிடம், உணவு, கல்வி, மற்றும் வாழ்க்கை தொழில் சார்ந்த பயிற்சி புத்தகம், நோட்டு புத்தகம் மற்றும் சீருடை |
| 4. | தகுதியானவர்கள் | : | விதவைகள் கைவிடப்பட்டவர்கள், ஊனமுற்றவர்கள் மற்றும் துணையற்ற பெண்கள் மற்றும் சிறு குழந்தைகள் |
| 5. | அடிப்படை தகுதி : | | |
| | அ) வருமான வரம்பு | : | ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகாமல் |
| | ஆ) வயது வரம்பு | : | 16 வயது முதல் 40 வயது வரை |
| 6. | அணுக வேண்டிய அலுவலர் | : | 1. மாவட்ட சமூக நல அலுவலர்.<br>2. உதவி இயக்குநர், சேவை காப்பகம், தாம்பரம்<br>சேவை காப்பகங்களின் கண்காணிப்பாளர்<br>விரிவு அலுவலர் (ச.ந.) |
| 7. | விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் | : | 1. விண்ணப்பதாரரின் சான்றிதழ்<br>2. விதவை / துணையற்றவர் / கைவிடப்பட்டவர் / அனாதை ஆகியவற்றிற்கான சான்றிதழ்<br>3. வருமானம் சான்றிதழ் விண்ணப்பதாரர் / பெற்றோர் / காப்பாளர்<br>4. ஊனமுற்றோர் அதற்கான சான்றிதழ்<br>5. விதவைகள் கணவருடைய இறப்பு சான்றிதழ்<br>6. கடைசியாக படித்த கல்வி சான்றிதழ் இருக்கும் பட்சத்தில் |
| 8. | குறைகளை தெரிவிக்க அணுகவேண்டியவர் | : | மாவட்ட அளவில் - மாவட்ட ஆட்சியர் / மாவட்ட சமூக நல அலுவலர்<br>மாநில அளவில் - சமூக நல இயக்குநர், சென்னை - 5,<br>தொலைபேசி : 28545728 |

# “யாதவர் பாசறை”

மாத இதழ் மூலம் யாதவ சமுதாயம் விழிப்புணர்வு பெற்று வாழ்வில் வெற்றி பெற எங்களது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

## ASOK STEELS

106/14, கே.எச். ரோடு,
கொருக்குப்பேட்டை, சென்னை - 21.
செல் : 9994333283

## AGD TRADERS

109 A, ஜி.எஸ்.டி. ரோடு,
மேலவலம்பேட்டை, கருங்குழி - 603 303
செல் : 9994332283

## AGD STEELS

200/A, யாதவர் தெரு, வல்லம் ஸ்கூல் அருகில்,
செங்கல்பட்டு
செல் : 9994334283

எங்களிடம் கட்டிடங்களுக்கு தேவையான
**கம்பி, சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி** குறைந்த விலையில் கிடைக்கும்

*With Best Compliments from :*

**G.THIRUVENGADAM YADAV,** M.A.,B.L.,

## SRI LAKSHMI ROAD LINES

**FLEET OWNERS AND TRANSPORT CONTRACTORS**
***MILK*GLUCOSE*ETHOLEIN OXIDE*P.OXIDE**

**Plot No. M.C.I., Block No.3 (Opp.4/1)**
**Mogappair East, Chennai – 600037**
**Phone :26561889 Fax: 26562230**
**Mob: 9385558598**
**Email: srilakshmiroadlines@hotmail.com**

## யாதவ இளைஞர்களுக்கான விளையாட்டு விழா

16-1-2011 மற்றும் 17-1-2011 அன்று மதுரை, தென் பழஞ்சி கிராமத்தில் சென்னை யாதவா சோஷியல் அசோசியேஷன் சார்பில் "மாதம் ஒரு சேவை" திட்டத்தின் கீழ், யாதவ இளைஞர்கள் விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில், இராஜபாளையத்தைச் சேர்ந்த தொழிலதிபர் திரு. கருப்பையா, மதுரை திரு. சோலைமலை பிச்சை, நெல்லை திரு. சுடலை, திரு. பார்த்தசாரதி, திரு. சொரிமுத்து, திரு. நாகைசாமி, மற்றும் சென்னையைச் சேர்ந்த சங்கத்தின் அங்கத்தினர் திரு. ரமேஷ் ஆகியோர் விழாவிற்கு வந்து சிறப்பித்தனர். தென் தமிழகத்தின் பல கிராமங்களிலிருந்து இளைஞர்கள் விளையாட்டு விழாவில் பங்குக் கொண்டனர். இவ்விழாவில் கிரிக்கெட், கபடி, ஓட்டப்பந்தயம், குண்டு எறிதல், கோலப்போட்டி போன்ற பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. இத்தகைய போட்டிகள் யாதவ இளைஞர்களின் திறமையை வெளிக் கொணரும் சக்தி என்றும், இவ்விழாவை சிறப்பான முறையில் செய்து கொடுத்த தென்பழஞ்சி கிராமத்தைச் சேர்ந்த மெய்யாதவ், C. யுவராஜ், பால்முருகன், பாலகிருஷ்ணன், வைரமுத்து, ஜெகதீஸ்வரன், குடியரசு, மிட்டாய் கண்ணன், வடபழஞ்சி கிராமத்தைச் சேர்ந்த ராஜா, ஆகியோருக்கும், தலைவர் யுவராஜ் அவர்கள் நன்றி தெரிவித்தார்.

தலைவர் யுவராஜ் அவர்கள் பேசுகையில், வாழ்க்கையில் மிகப் பெரிய அளவில் வெற்றி பெற்றவர்கள் கிராமத்திலிருந்து வந்தவர்கள்தான் என்றும், கணினி மற்றும் இன்டர்நெட் மூலம் உலக அளவில் உள்ள அனைத்தையும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இருப்பதாலும், கிராமத்தில் பிறந்ததற்காக அவர்கள் பெருமை கொள்ள வேண்டும் என்று கூறினார். விழாவின் இறுதியில் 17-1-2011 அன்று 80க்கும் மேற்பட்ட பரிசுகள் வழங்கப்பட்டது.

## வார்த்தை விளையாட்டு

இந்த விளையாட்டின் நோக்கம், நம் குழந்தைகளை ஆங்கில வார்த்தைகள் அதிகம் கற்றுக் கொள்ளவும், பழகிக் கொள்ளவும் வைப்பது தான். இந்தக் கட்டத்தில் உள்ள எழுத்துக்களை உபயோகித்து, குறைந்தபட்சம் 4 எழுத்துக்கள் கொண்ட வார்த்தைகளை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு வார்த்தையிலும் பெரிய அளவில் இருக்கும் எழுத்தை கண்டிப்பாக உபயோகிக்க வேண்டும். அதிக வார்த்தைகளை உருவாக்கிய யாதவ மாணவரின் பெயர், தந்தையார் பெயர், தாயார் பெயர் மற்றும் புகைப்படம், யாதவர் பாசறையில் பிரசுரிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| I | O | U | |
| S | T | I | **R** |
| U | P | S | |

| | | | |
|---|---|---|---|
| L | I | T | |
| U | N | O | **O** |
| V | I | N | |

| | | | |
|---|---|---|---|
| D | I | N | |
| S | E | R | **F** |
| E | L | S | |

# ஒன்றுபடுவோம் !
# வெற்றி பெறுவோம் ! !

ஜனநாயக மக்கள் தமிழ் தேசம் கட்சி என்ற அமைப்பு, குறிப்பாக தமிழகத்தில் வாழும் யாதவ மக்களுக்கும் மற்றும் சிறுபான்மை மக்களுக்கும் சமுதாய தொண்டு ஆற்றிடவும், அவர்களுடைய உரிமைகளை மத்திய மாநில அரசுகளிடமிருந்து பெற்றிடவும் முழு மூச்சுடன் பாடுபட்டு கொண்டு வருகிறது. ஆகவே சமுதாய பொது மக்களும் சிறுபான்மை மக்களும் பெருவாரியாக ஆதரவு கொடுத்து உரிமைக்கு போராட வாரீர் !

வணக்கம்.

**கு. மருதுபாண்டியர்**

22, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை

நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

போன் : 9444089833 - 9003089833

Advertisment



CHOSUN WELDING CO., LTD
KOREA
Authorised Dealer
Falcon WELDING CABLE

**Welding Electrodes**

# CLARION
## ENTERPRISES

No.635, C.T.H. Road, Mannurpet, Chennai - 600 050. India

Ph : 044-26246581, Telefax : 26253836

E-mail : cleancare@vsnl.net

# ஆட்டம்மை

டாக்டர் **பூவண்ணன்,** கால்நடை மருத்துவர்.

ஆட்டம்மைநோய் பெரும்பாலும் ஆடுகளை தாக்கும். இது ஒருவித வைரஸ் கிருமியால் ஏற்படுகிறது. பொதுவாக இந்நோய் செம்மறி ஆடுகளை அதிக அளவில் தாக்கும். இந்நோய் கண்ட ஆடுகளின் தோலின் மீது கொப்புளங்கள் உண்டாகும். ஜுரம் ஏற்படும், அதிக உமிழ்நீர் வடியும், கண்களிலிருந்தும், மூக்கிலிருந்தும் நீர்கசியும். பெரும்பாலும் மூக்கு, கண், இமை, வாலின் அடிப்பகுதி, கன்னங்கள், மடி, பிறப்பு உறுப்புக்கள் ஆகியவைகளில் சிறுசிறு கொப்புளங்கள் காணப்படும். சிகிச்சை அளிக்காத ஆடுகள் விரைவில் இறக்கக்கூடும்.

இதற்கு முன்னெச்சரிக்கையாக ஆட்டம்மை தடுப்பு மருந்து உள்ளது. இது கால்நடை நோய்தடுப்பு மருந்து நிலையத்தில் விற்கப்படுகிறது. இதனை கால் நடை உதவி மருத்துவர் மூலம் பெற்று விவசாயிகள் தங்களது ஆடுகளை காப்பாற்றிக் கொள்ளலாம்.


*With best compliments from*

**R.M. ASSOCIATES**

No.5, 4th Street, Dr. Radhakrishnan Salai,
Mylapore, Chennai - 600 004.
Ph : 28474423, 28475173 & 28472244, Fax : 28474741
E-mail : ranganathan@bsnl.in

**RANGANATHAN** - Managing Partner

Authorised Wholesale Dealer for :
**Exide Tubular / Powersafe Maintenance Free Batteries and Exide Automotive Batteries for UPS, EPABX, Invertors, Emergency Lamps**

B.O. : 194, T.H. Road, Tondiarpet, Chennai - 600 081. Phone : 25954094

***We undertake Annual Maintenance Contract for all kinds of Batteries***

*With best compliments from :*

# K. RAMESH
Proprietor

# SUBARDHINIS ASSOCIATES
Dealing in **SEWING THREADS**

25, V.R. Pillai 2nd Street, Triplicane,
Chennai - 600 005.
Mobile : 9444388367

*With best compliments from :*

# MEENAKSHI MAHAL
# &
# MEENKASHI PLYWOODS

## *Ramu Yadav*
9/238A, Keezh Pallivasal Street,
Paramakudi, Ramanathapuram District

## HOW IS THE DEPTH OF THE SEA MEASURED?

Even though man has acquired a lot of information about the seas today, yet there are many mysteries which have not been unravelled. For instance, still we do not know definitely about the time of their origin. This much, however, is certain that there were no seas at the beginning of the creation.

Today man has developed innumerable instruments that help him to go deep into the seas and acquire more and more knowledge about their bottoms. Do you know, how the depth of the sea is measured with the help of modern instruments?

The equipment which is used to measure the depth of the sea is called a 'fathometer'. It is installed on a ship. It produces sound waves having frequencies of more than 20,000 hertz. These are called ultrasonic waves. They cannot be heard by human ears. These waves are transmitted inside the sea. They are reflected back by the bottom of the sea. The reflected waves are received by a receiver and the total time taken by them to travel from the sea surface to the bottom and back to the surface is measured. Half of this time multiplied by the velocity of sound in sea water gives the depth of the sea at the point of the experiment. Thus, the depth of the sea can be measured at any point.

This technique has been used to measure the depths of the various seas and the deepest spot in each of the seas has been located. The Pacific Ocean is the deepest ocean. The average depth of this ocean is 4282 metres (14,048 feet) The deepest spot in this ocean is located near Guam and has a depth of 10,668 metres (35,000 feet). Guam is an island ill the Pacific Ocean. It is about 5000 kms. (3000 miles) to the west of the Hawaii islands. Using depth as a criterion, the Indian Ocean occupies the second place. Its average depth is 3963 metres (13,002 feet). The Atlantic Ocean, coming third, has an average depth of 3926 mdres (12,880 feet). Amongst The shallow seas, the Baltic Sea occupies the first place. Its average depth is 55 metres (180 feet).

Studies of the seabeds have revealed that they are also as uneven as the surface of the earth. They are full of the skeletons of the aquatic animals as well as big and small sea plants. Volcanic ash is also found there.

# கோலம்



***21 புள்ளி 5 வரிசை***
***நேர் புள்ளி 5 முடிய***

**www.yuyu.co.in** என்ற இணையதளம் நம் யாதவ சமுதாயம் பல வகைகளில் பயன்பெறும் பொருட்டு, தொடங்கப்பட்டுள்ளது. இவ்விணையதளத்தில் பதிவு செய்து கொண்டு, Business Network மூலம், இளைஞர்கள் ஒருவருடன் ஒருவர் தகவல்களை சாட்டிங் (Chatting) மூலம் பரிமாறிக் கொள்ளலாம். தங்களுக்குள் பரஸ்பர உதவி Mutual Benefit பெற்று பல வகைகளில் பயன்பெறலாம். இவ்விணையதளத்தில் உள்ள திருமண தகவல் பகுதியின் கீழ் பதிவு செய்து கொண்டு, திருமண தகவல்கள் பெற்றும் பயன் பெறலாம். இச்சேவைகள் அனைத்தும் இலவசமாக அளிக்கப்படுகிறது.

# நீங்களும் I.A.S. / I.P.S. ஆகலாம்

பேரா. டாக்டர் இரா.வீ. அப்பாத்துரை யாதவ்

நம்மால் முடியும் ! நாள் கடத்தாதீர் !! விழித்தெழு ! வீறு கொண்டெழு !!

Now ! or Never !!

- சென்ற இதழ் தொடர்ச்சி

**மாயை :**

அதிக புத்திசாலித்தனமாக இருப்பவர்களும், அதிக மார்க் தொடர்ந்து வாங்குபவர்களும், ஆங்கிலப் புலமை உடையவர்கள் மட்டுமே இத்தேர்வில் வெற்றி பெற முடியும் என்றும், நமக்கெல்லாம் வாய்ப்பே இல்லை என்ற மாயத் தோற்றம் காணப்படுகிறது.

**உண்மை :**

அறிவுக் கூர்மைக்கு இதுவரை யாராலும் அளவுகோல் சரியாக வரையறுத்து கூற முடியவில்லை. படிக்கும் போது தொடர்ந்து பெற்ற உயர் மதிப்பெண்கள் ஒரு பொருட்டல்ல. பட்டப்படிப்பிலும் இரண்டாவது வகுப்பில் தகுதி பெற்ற பலர் இத்தேர்வில் மிகச்சிறந்த வெற்றியைப் பெற்றுள்ளார்கள்.

இத்தேர்வு முறையை சரியாக புரிந்து கொண்டு, விடா முயற்சியுடன் கடினமாக உழைத்ததால் வெற்றி பெற்றதாகப் பலர் பேட்டியளித்துள்ளனர். எனவே அடிப்படைத் தகுதியும், அயராத உழைப்பும் இருந்தால் போதும் இப்பயிற்சியை வெற்றியுடன் பயின்று முடிக்க முடியும்.

எடுத்துக்காட்டாக, பள்ளிப்படிப்பை ஞாபக மறதியால் தொடர முடியாமல், அவதிப்பட்டு, பின்னர் ஒரு ஆர்வத்தின் காரணமாக திறந்தநிலை பல்கலைக் கழகக் கல்லூரியில் (B.A) இளங்கலை பட்டம் பெற்ற சராசரி மாணவர் நந்தகுமார் என்பவர் இத்தேர்வில் வெற்றி பெற்று வருமான வரித்துறை அலுவலகத்தில் உயரதிகாரியாக உள்ளார்.

ஆங்கில அறிவு ஓரளவுக்கு தேவை உள்ளது. புலமையெல்லாம் தேவையில்லை. ஆங்கிலத்தாள் தவிர பிற அனைத்துத் தேர்வுகளையும், நமது தாய்மொழி தமிழிலேயே எழுதலாம். கவலையின்றி, பயிற்சி மூலம் ஆங்கிலத்திறன் எளிதாக வளர்த்துக் கொள்ளலாம்.

**மாயை :**

பெரும்பணக்காரர்களும், அரசியல் செல்வாக்கு உள்ளவர்கள் மட்டுமே இந்தப் பணிகளைப் பெற முடியும். சாதாரண மக்கள் இப்பணிகளை பெற முடியாது.

**உண்மை :**

இது முற்றிலும் தவறானதொரு கருத்து. மத்திய அரசுப் பணி தேர்வாணைக் குழு (UPSC) என்னும் முழுச் சுதந்திரமான ஒரு அமைப்பு இத்தேர்வை நடத்திப் பணி வழங்குகிறது.

லாரி ஓட்டுநரின் மகனும், கூலித் தொழிலாளியின் மகனும் நேர்முக தேர்வில் டெல்லிக்கு சென்று, மிக உயர்ந்த மதிப்பெண்களோடு வெற்றி பெற்று, சொந்த மாநிலத்தில் பணியாற்றுவதற்கு வாய்ப்பும் பெற்றுள்ளார்கள்.

**மாயை :**

இறுதியாக இத்தேர்வில் வெற்றி பெற மிகவும் அழகாகவும், உயரமாகவும், உடல் பலத்தோடும் இருக்க வேண்டும் என்ற கற்பனையும், நுனி நாக்கில் சரளமாக ஆங்கிலம் பேச வேண்டும் என்ற மாயத் தோற்றம் காணப்படுகிறது. நேர்முகத் தேர்வில் எந்த வகையான கேள்விகள் கேட்கப்படும், அவை நமக்குப் புரியாது என்றும், நாம் அத்தேர்வில் வெற்றி பெற முடியாது என்ற மாயை காணப்படுகிறது.

**உண்மை :**

இவற்றில் சிறிய அளவிலும் உண்மையில்லை. உங்கள் ஆளுமைத் திறன் மட்டுமே சோதிக்கப்படும். ஒரு நபரின் உயரம், அழகு சோதிக்கப்படுவதில்லை. நேர்முகத் தேர்வில் நாம் விரும்பினால் நம் மொழி தெரிந்த ஒருவரை அவரின் பரிந்துரையின் கீழ் உதவிக்கு வைத்துக் கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது. அந்நபரின் பெயர் Interpreter என்று பெயர்.

இப்பொழுது நம் உள்ளங்களில் மண்டிக் கிடந்த மாயைகள் சற்றே விலகி, நாமும் இப்பயிற்சியை கற்க முடியும் என்ற எண்ணம் நம் உள்ளங்களில் எழுகிறது அல்லவா ? அடுத்து நமது மனதில் அடுக்கடுக்கான ஐயப்பாடுகள் அனைத்தையும் நீக்குகின்ற வகையில் சில விளக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

I.A.S., I.P.S., I.F.S., I.R.S., I.Rly.S. போன்ற பணிகளுக்குத் தனித்தனியாக தேர்வு எழுத வேண்டிய அவசியம் இல்லை. U.P.S.C. (Union Public Service Commission) நடத்தும் Civil Services Examination எழுதினால் போதும். அதில் பெறுகின்ற மதிப்பெண்கள் அடிப்படையில் இட ஒதுக்கீடு பின்பற்றப்பட்டு, தேர்வு செய்யப்படுவார்கள். அந்தத் தரவரிசைக்கேற்ப அவர்களுக்கு, I.A.S., I.P.S. I.F.S. I.R.S. போன்ற பணிகள் ஒதுக்கப்படும். I.A.S., I.P.S., ஆக தேர்ச்சி பெறுபவர்கள் மட்டும் அவர்களுடைய தரவரிசைக்கேற்பவும், மாநில பணிகளுக்கு பணி அமர்த்தப்படுவர், அவர்கள் அந்தந்த மாநிலங்களிலேயே பணியாற்றி ஓய்வு பெறுவர். மற்ற அனைத்து பணிகளும், நேரடியாக மத்திய அரசுத் துறைகளில், இந்தியா முழுவதும் பணியாற்றுகின்ற வகையில் எடுத்துக்காட்டாக வருமான வரித்துறை, Central Excise & Customs, ரயில்வே துறை, அஞ்சல் துறை, தொலை தொடர்புத் துறை, Accounts & Auditing போன்ற பல துறைகளில் பணி கிடைக்கும்.

ஒருவர் I.A.S., I.P.S. ஆக தேர்ந்தெடுக்கப்பட்டு, தன் சொந்த மாநிலத்திலேயே பணி அமர்த்தப்பட வேண்டுமானால், அவர் அவரது மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் மிக அதிக மதிப்பெண் பெற்றவராக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டிற்கு 12 I.A.S., அல்லது I.P.S. அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றால் அவர்களில் 1/3 பகுதியினர்

(4 பேர்) தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குள், முதல் முன்று மதிப்பெண்கள் பெற்றவர்களாகவும், மீதமிருப்பவர்களில் ஒருவர் ஆதிதிராவிட வகுப்பினரில் முதல் மதிப்பெண் பெற்றுள்ள நபராகவும் இருப்பர். இவர்கள் தமிழ்நாட்டிலேயே பணிபுரியும் வாய்ப்பைப் பெறுவர். மீதமுள்ள 2/3 பகுதியினர் (8 பேர்) தேர்ந்தெடுக்கப்பட்ட வேறு மாநிலங்களை சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படும்.

எனவே I.A.S. I.P.S. அதிகாரியாக தேர்வு பெற்று, சொந்த மாநிலத்திலேயே பணிபுரிய விரும்புபவர்கள் மிகக் கடுமையாக உழைத்து மிக அதிகமாக மதிப்பெண் பெற வேண்டியது என்பது நிச்சயமான உண்மை

**"NO GAIN WITHOUT PAIN"**

என்பது உண்மையான ஒரு கூற்று. கடுமையாக உழைக்கத் திட்டமிட்டு, தனது இலட்சியமாக I.A.S. & I.,P.S. பயிற்சியை மேற்கொண்டு, இடைவிடா முயற்சியில் ஈடுபட தயாராக இருப்பவர்கள் இதில் நிச்சயம் வெற்றி பெற முடியும். வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

யாதவ இளைஞனே, இளைஞியே உங்களக்கு ஒரு சந்தோஷமான செய்தி. நீண்ட நெடிய போராட்டங்களுக்கு பிறகு, மண்டல் கமிஷனரின் சிபாரிசுப்படி, மத்திய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27% ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசுப் பணிக்கான போட்டித் தேர்வு எழுதும் போது நாம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்பதை Claim செய்வதற்கு, நமது மாநில அரசு வழங்கியுள்ள ஜாதிச் சான்றிதழ் அட்டை பயன்படாது. அதற்கென்றே உரிய படிவத்தில் பூர்த்தி செய்து தாசில்தார் வழங்குகின்ற இதர பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் (OBC) பெற்றிருக்க வேண்டும்.

நம்மினத்தவர்களில் பெற்றோரின் வருமானம் வருடத்துக்கு ரூ.4,50,000/- குறைவாக உள்ளவர்கள் அனைவரும் இதர பிற்படுத்தப்பட்டோர் சான்றிதழ் பெற முடியும். உடனடியாக நம்மவர்களின் தகுதியுடைய அனைவரும் OBC சான்றிதழ் பெற்று வைத்து கொள்ளுங்கள்.

நாம் செய்யும் முயற்சிக்கு தக்க கூலி நிச்சயமாகக் கிடைக்கும் இதை தெய்வத்திரு. திருவள்ளுவரும்,

தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன்
மெய்வருத்தக் கூலி தரும்.

இதை நமக்கு உணர்த்தியுள்ளார்.

